

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா அவர்களின் மகள் வழிப் பேத்தி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத் – எஸ்.ஹனீஃப்கான் அவர்களின் திருமணம் கடந்த 05.07.2026 அன்று தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதனையொட்டி நேற்று (03.08.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை மணமக்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### தமிழ்நாட்டில் நகர்ப்புற-கிராமப்புறங்களில்

# அத்தியாவசிய மருந்துகள் கிடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 4 -

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை பின்வரும் கேள்விகளை கேட்டிருந்தார்.



(a) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி கேந்திராக்களில் (PMBJKs) அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு மற்றும் தடையற்ற விநியோகம் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீடு செய்துள்ளதா; அப்படியெனில், அதன் விவரங்களை ஆண்டு வாரியாக தெரிவிக்கவும்;

(b) தமிழ்நாட்டில் உள்ள அத்தியாவசிய மருந்து வசதிகளின் இருப்பு, இருப்பு வைப்பு மற்றும் சரியான நேரத்தில் நிரப்புதல் ஆகியவற்றைக் கண்காணிக்க நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பொறிமுறையின் விவரங்கள்;

(c) மாநிலத்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, அவற்றின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தை வலுப்படுத்த ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா; அப்படியெனில், அதன் விவரங்கள்;

(d) மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் கூடுதல் PMBJKகள் அங்கீகரிக்கப்பட / அமைக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளதா; மற்றும்

(e) குறிப்பிட்ட மாநிலத்தில் மலிவு விலையில் அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அவருக்கு ஒன்றிய இரசாயண மற்றும் உரத்துறை இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

### மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த – டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாடு விவசாயிகள் நாக்பூரில் கைது!

# ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிப்பதா?

## வலைதளப் பதிவில் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஆக.4-

**மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த - டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் நாக்பூரில் மகாராஷ்டிர அரசால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார்.**



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக ரயிலில் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை நாக்பூரில் கைது செய்துள்ள மகாராஷ்டிரா மாநில காவல்துறையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மேகதாது விஷயத்தில் தொடக்கம் முதலே கர்நாடகாவுக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாகச் செயல்படும் நீர்வளத் துறையின் போக்கை கண்டித்துதான் தமிழ்நாட்டு விவசாயிகள் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தனர்.

ஆனால், அவர்கள் ரயிலில் சென்று கொண்டிருக்கும் போதே நடுவழியில் இறங்க வைத்து, தமிழ்நாட்டுக்கே திரும்பிச் செல்லுங்கள் எனக் கட்டாயப் படுத்தி உள்ளது மகாராஷ்டிர காவல்துறை.

நாக்பூரில் கைது செய்யப்பட்டுள்ள நம் விவசாயிகளை உடனே விடுவிக்க தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம் விவசாயிகளைக் கைது செய்த மகாராஷ்டிர அரசிடம் அதற்கான விளக்கத்தைக் கேட்பதுடன், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கான உறுதியைப்பெறவேண்டும்.

டெல்லி சென்று போராட அவர்களை ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும்.

ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

# நாக்பூரில் தமிழ்நாடு விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்டனம்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக.4-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



மேகதாது அணை கட்டுமானத்திற்குக் கண்டனம் தெரிவித்து டெல்லியில் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் மராட்டிய மாநிலம் நாக்பூரில் அம்மாநில காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.ரயிலில் பயணம் செய்த விவசாயிகளை நடுவழியில் இறங்கச் செய்து திருப்பிச் செல்லுமாறு கட்டாயப் படுத்தி இருக்கின்றனர்.

தங்களது வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நோக்கில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்காக சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை மராட்டிய மாநில பா.ஜ.க. அரசின் காவல்துறை தடுத்து நிறுத்தி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

ஒன்றிய அரசின் நீர்வளத் துறையின் செயல்பாடுகள் தொடர்ச்சியாக கர்நாடக அரசுக்கு சாதகமாக இருந்து வரும் நிலையில் தங்களது உரிமைகளை நிலைநாட்ட போராட்டத்திற்கு செல்லும் நிலைக்கு தமிழ்நாட்டின் விவசாயிகள் தள்ளப்பட்டனர். அவர்களின் போராட்ட உணர்வு என்பது இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமையின் அடிப்படையானது.

விவசாயிகளின் உரிமை போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது கடும் கண்டனத்துக்குரியது.

தமிழ்நாட்டின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்படுவதை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாடு அரசு மராட்டிய மாநில அரசிடம் இது குறித்து விளக்கம் கேட்க வேண்டும். காவேரி மேகதாது பிரச்சனையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க. அமைச்சரின் வாக்குறுதியை மீறி ஜெயங்கொண்ட நிலை பகுதியில்

# கல்குவாரி அமைக்க 38 கிராம மக்கள் கடும் எதிர்ப்பு!

## 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 4 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா ஜெயங்கொண்ட நிலை அருகே புதிய கல்குவாரி அமைக்கும் பணிகள் கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது .

இதற்கு எதிப்பு தெரிவித்து ஜெயங்கொண்ட. நிலை, கிருஷ்ணாபுரம், மலம்பட்டி, மல்லாக் கோட்டை, சித்த பள்ளிப் பட்டி ஆகிய கிராமமக்கள் கடந்த மாதம் சாலை மறியலில் ஈடுபட்டார்கள் . கல்குவாரி அமைப்பதற்கு கனிம வளத்துறை அமைச்சர் டி .கே. பிரபுவிற்கு தொடர்பு இருப்பதாக கூறி கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுட்டார்கள் . இதுகுறித்து அமைச்சர் நேரில் கிராமமக்களை சந்தித்து பேசவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதில் கல்குவாரி அமைக்க ஆதரவாக அதே கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர்.

இதனால் கிராமமக்களிடையே மோதல் ஏற்பட்டது.இதுகுறித்து போலிஸில் இருதரப்பினரும் புகார் செய்தனர். இது தொடர்பாக கிராமமக்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கலெக்டரிடம் மனு கொடுத்தார்கள். இந்த நிலையில் நேற்று முன் தினம்கனிமவள அமைச்சர் டி.கே.பிரபு ஜெயங்கொண்ட நிலைகிராமத்திற்கு நேரில் சென்று இப்பகுதியில் கல்குவாரி அமைக்க யாருக்கும் அனுமதி தரவில்லை என்று கூறினார். கிராம மக்கள் இதனால் போராட்டம் நடத்த வேண்டாம் என்று கூறினார்.

அமைச்சர் கூறியதை ஏற்று கிராமமக்கள் போராட்டத்தை கைவிட்டார்கள். ஆனால் அமைச்சரின் வாக்குறுதியை மீறி கடந்த இரண்டு சில தினங்களாகஜெயங்கொண்ட நிலை பகுதியில் கல்குவாரி அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. எனவே இது தொடர்பாக ஜெயங்கொண்ட நிலையில் கிராம மக்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது . இதில் கல்குவாரி அமைக்க அனுமதி இல்லை என்று அமைச்சர் கூறியதை மீறி தற்போது கல்குவாரி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

**குடியுரிமை அட்டைகளை திருப்பி அனுப்புவோம்!**

இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும்.

நிலத்தடி நீர் குறையும். சுத்தமாக குடிநீர் பாதிக்கப்படும். விவசாயப் பணிகள் பாதிக்கப்படும். எனவே கல்குவாரி அமைக்கும் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு பணிகள் நிறுத்தப்பட விட்டால் ஜெயங்கொண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 38 கிராமமக்களை ஒன்று திரட்டி மாபெரும் போராட்டத் தை நடத்தவும் முடிவு செய்துள்ளார்கள் .

தொடர்ந்து ரேஷன் கார்டுகள் ,வாக்காளர் அட்டை, ஆதார் கார்டு போன்ற அரசு வழங்கிய அனைத்து குடியுரிமை அட்டைகளையும் திருப்பி அனுப்புவதுடன் அரசு பள்ளியில் படிக்கும் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மாட்டோம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்கள். இதனால் அப்பகுதியில் கிராம மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.அரசு அனுமதி பெறாமல் கல் குவாரி அமைக்கும் பணியை உடனே நிறுத்த வேண்டும் . இதில் அமைச்சரின் வாக்குறுதி காற்றில் பறந்ததாக கிராம மக்கள் கருதுகின்றனர் . இந்த கல்குவாரி எதிர்ப்பு கூட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

### தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சாயபட்டறைத் தொழிற்சாலக்கு சீல் வைப்பு பிரச்சினை!

# வருகிற 8 ந்தேதி மீண்டும் போராட்டம்!அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவு!

## தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி, ஆக.4 –

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் ஆடித்தவசுத் திருவிழாவுக்காக விசைத்தறித் தொழிலாளர்கள் போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் (2ந்தேதி ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மீண்டும் வருகிற 08 082026 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா பங்கேற்று உரையாற்றினார்.

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் மற்றும் சுற்றுவட்டா ரங்களில் 5000க்கும் மேற்பட்ட விசைத்தறிக்களில் சுமார் 15000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதற்காக நூலுக்கு சாயம் போடும் 20 சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள் உள்ளன.இதிலிருந்து வெளியேறும் சாயக்கழிவு நீரால் சுகாதாரக்கேடு ஏற்படுவதாகவும், தொற்று நோய் பரவும் அபாயம் இருப்பதாக புகார் எழுந்ததைத் தொடர்ந்து, அங்கு ஆய்வு செய்த சுற்றுச் சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் வி.கே.ராஜீவ் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன்படி மாசுகட்டுப்பாட்டு வாரியத்தினர் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளுக்கு சீல் வைத்தனர்.மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

இதனக் கண்டித்தும்,கழிவுநீர் சுத்திகரிப்பு வளாகத்தை அரசே ஏற்று நடத்தக்கோரியும் விசைத்தறித் தொழிற்சங்கத்தினர் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம், கஞ்சிதொட்டி திறக்கும் போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களை நடத்தினர்.கடந்த மாதம் 18 ஆம் தேதி ஆடித்தவசுத் திருவிழா தொடங்கியதால் தொழிலாளர்களின் போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் விசைத்தறித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால், போராட்டக்காரர்களின் சார்பில் (2 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை)அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தி.மு.க சார்பில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., நகர செயலாளர் மு.பிரகாஷ், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் லாலா சங்கரபாண்டியன்,அ.தி.மு.க.சார்பில் சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் திலீபன்ஜெய்சங்கர்,நகர்மன்ற துணைத் தலைவர் கண்ணன்,நகராட்சி உறுப்பினர் எஸ்..டி.சங்கரசுப்பிரமணியன்,ம.தி.மு.க சார்பில் மாநில செயற்குழு உறுப்பினர் வெங்கடாசலபதி,நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திக்,பா.ஜ.க.சார்பில் நகர தலைவர் உதயகுமார், இந்து முன்னணி சார்பில் திருமலைக் குமார் உள்ளிட்டோர் பங்கேற்று தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துப் பேசினார் கள்.இந்தக் கூட்டத்தில் த.வெ.க. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கவில்லை.

இந்த கூட்டத்தில் விசைத்தறித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுக்காக்க மீண்டும் வருகிற (8 ஆம் தேதி சனிக்கிழமை) திருவேங்கடம் சாலை பாடாப்பிள்ளையார் கோயில் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவும்,அதில் விசைத்தறித் தொழிலாளர்கள் குடும்பத்துடன் பங்கேற்கவும் முடிவு செய்யப்பட்டது.மேலும் அந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க., அ.தி.மு.க, பா.ஜ.க., ம.தி.மு.க., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட கட்சியினர் பங்கேற்க ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனிடையே விசைத்தறி தொழிலாளர்கள் சாயப்பட்டறை நடவடிக்கையில் சங்கரன்கோவிலுக்குத் தனிச்சட்டமா? தாங்கள் விருதுநகர் மாவட்டத்திற்கு புலம் பெயரவா?என த.வெ.க.அரசுக்கு கேள்வி கேட்டு ஒட்டப்பட்டள்ள சுவரொட்டியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பேசியதாவது.

மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளை மீறியதாக கூறி சீல் வைக்கப்பட்ட சாயப்பட்டறைகளுக்கு மாற்று ஏற்பாடுகளை தற்போதைய த.வெ.க.அரசு செய்து தர வேண்டும். விசைத்தறி தொழிலாளர்கள் நடத்தும் அனைத்து போராட்டங்களுக்கும், நெசவாளர்களுக்கு பக்கபலமாக தி.மு.க. என்றைக்கும் இருக்கும்.வரும் 5 ஆம் தேதி (நாளை)சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் குரல் எழுப்புவேன் என்று பேசினார்.

### தென்காசி மாவட்டம் இலஞ்சி பேரூர் வார்டு செயலாளர்

# வே.ராஜ் குடும்பத்திற்கு கலைஞர் அறக்கட்டளை நிதி ரூ.25 ஆயிரம்!

## வே.ஜெயபாலன், தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. காசோலையினை வழங்கினர்!

தென்காசி, ஆக. 4 –

தென்காசி தெற்கு மாவட்டம் இலஞ்சி பேரூர் 11 வது வார்டு செயலாளர் வே.ராஜ் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிய கோரிக்கையை ஏற்று கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மூலம் கலைஞர் அறக்கட்டளை நிதி ரூபாய் 25000 காசோலையை அன்னாரது குடும்பத்தினரிடம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் வழங்கினர்.

தென்காசி தெற்கு மாவட்டம் இலஞ்சி பேரூர் 11 வது வார்டு செயலாளர் வே.ராஜ் மனைவி சில மாதங்களுக்கு முன்பு புற்று நோயால் இயற்கை எய்தினார்.தலைமைக் கழகத்திற்கு அனுப்பிய கோரிக்கையை ஏற்று அன்னாரது குடும்பத்திற்கு கல்வி உதவித்தொகையாக கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மூலம் கலைஞர் அறக்கட்டளை நிதி ரூபாய் 25000 காசோலையாக வழங்கப்பட்டது. இந்த காசோலையை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், பேரூர் செயலாளர் முத்தையா ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்தன் அறங்காவலர் குழு உறுப்பினர் சுந்தர்ராஜன், பூவையா, சண்முகநாதன் மற்றும் இலஞ்சி பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




மெஞ்ஞானபுரம் அருகே உள்ள காக்கிவிளை முத்தாரம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு காக்கிவிளை விளையாட்டு கழகம் நடத்திய 2ஆம் ஆண்டு ஆண்களுக்கான மாநில அளவிளான மின்னொளி கபாடி போட்டி காக்கிவிளையில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்போட்டியை முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.